# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1412/35 - 2005 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා - 2005.09.30

1412/35 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம், 139 ஆம் பிரிவுகளுடனும் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 27 ஆம் பிரவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, இக்கட்டளை மூலம், 21 ஆம் பிரிவின் கீழ் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பில் ஆக்கப்பட்டு, 1996 ஆம் ஆண்டு மாச்சு 27 ஆந் தேதிய 916/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையைப் பின்வருமாறு திருத்துகின்றேன் :-

(1) அத்தகைய கட்டளையின் (ஈ) ஆம் பந்தியினை நீக்கம் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலம் :-

"(ஈ) பின்வரும் துறைகளை அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு குறித்தொதுக்குகின்றேன் :-

(1) கலைகளும் பண்பாடும் பற்றிய துறை ;

(2) முகாமையும் வர்த்தகமும் பற்றிய துறை ;

(3) பிரயோக விஞ்ஞானங்கள் பற்றிய துறை ;

(4) இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அராபிய மொழி பற்றிய துறை ;" அத்துடன்

(2) அத்தகைய கட்டளைக்கான அட்டவணையின் I ஆம் நிரையில் காணப்படும் "பிரயோக விஞ்ஞானங்கள் பற்றிய துறை" எனும் விடயத்தை உடனடுத்தும் II ஆம் நிரையில் அதற்கு நேரொத்ததாகக் காணப்படும் பதிவுகளுக்கும் மேலதிகமாக பின்வருவனவற்றைச் சேர்த்தல் மூலம் :-

| "நிரை I | நிரை II |
|---|---|
| இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரர்பிய மொழி பற்றிய துறை | இஸ்லாமிய கற்கைகள் பகுதி,<br>அராபிய மொழிப் பகுதி.". |

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005, செத்தெம்பர் 28.

10-269

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.